வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 431 / ஆ4 / 2021 நாள் 22 – 02–2021

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2020–2021ம் கல்வி ஆண்டு – வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளில் உள்ள பெற்றோர் ஆசிரியர் கழக விதிமுறைகளை பின்பற்றி செயல்பட தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் அறிவுறுத்துதல் சார்பு .

பார்வை தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழக விதிமுறைகள் (பள்ளிக்ளுக்குரியது)

••••••

பார்வையில் காணும் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக விதிமுறைகளில் தொவித்துள்ளவாறு வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் , மெட்ரிக் பள்ளிகளில் உட்பட பெற்றோர் ஆசிரியர் கழகம் செயல்படவேண்டும். பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் பெற்றோர்களே பெற்றோர் ஆசிரியர் கழக தலைவராகவும் உறுப்பினர்களாகவும் பொறுப்பு வகிக்கும் வண்ணம் நியமனம் செய்யுமாறு தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் இத்துடன் பார்வையில் காணும் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத்திடமிருந்து பெறப்பட்ட பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழக விதிமுறை கையேட்டில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி செயல்படுமாறும் வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை தொடக்க, நடுநிலை, உயர்நிலை , மேல்நிலைப் பள்ளிகள் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு
பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழக விதிமுறை கையேடு

22.2.21
முதன்மைக் கல்விஅலுவலர்
22/2/21 வேலூர்

பெறுநர்
1. அனைத்து வகை தொடக்க, நடுநிலை , உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்
2. அனைத்து வகை மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.